DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur
CC.182/2021
Deposition of witness for PW.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திரு.கந்தன் | சாதி | .. | |
| த/பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 22.09.2022

முதல் விசாரணை – நான் தற்போது புத்தூரில் குடியிருந்து வருகிறேன். சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர்எதிரியை தெரியும். புகார்தாரர் சுந்தரம்மாளை தெரியாது. வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்,

போலிஸ் விசாரணையில் நான் ஆடுகளை வாங்கி விற்கும் தரகர் வேலை செய்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் அடிக்கடி எதிரி அய்யாச்சாமி விலைக்கு வாங்கும் ஆடுகளுக்கு தரகர் வேலை பார்த்து கமிசன் வாங்குவேன் என்றால் சரியல்ல. தீபாவளிக்கு ஆடு வாங்க வேண்டுமென்று எதிரி அய்யாச்சாமி கூறியதால் நான் திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில தாலுகா சேர்ந்த சுந்தரம்மாள் என்பவர் மதுரைக்கு ஆடுகளை விற்று விட்டு விற்காத மீதி ஆடுகளை திரும்ப கொண்டு வருவதாக கேள்விபட்டு ராஜபாளையம் புதிய பேருந்து நிலையம் அருகில் நின்று கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. 4.10.2012 ம்தேதி மாலை 6.30 மணிக்கு சுந்தரம்மாளிடம் இருந்த 16 வெள்ளாடுகளை ரூ.82000 விலை பேசி மறுநாள் சந்தையில் ஆடுகளை விற்று பணத்தை தருவதாக எதிரி அய்யாச்சாமி சுந்தரம்மாளிடம் தெரிவித்து அதற்கு

சுந்தரம்மாள் சம்மதம் தெரிவித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆடுகளை எதிரி அய்யாச்சாமி வாங்கி எங்கள் ஊர் நடுத்தெருவை சேர்ந்த கந்தசாமி மகன் சக்தி என்பவருடைய லோடு ஆட்டோவில் ஏற்றி கொண்டு புத்தூருக்கு கொண்டு வந்தார் என்றால் சரியல்ல. எதிரி அய்யாச்சாமி சுந்தரம்மாளிடம் கூறியது போல் சுந்தரம்மாளுக்கு ஆடுகளை விற்று தரவேண்டி பணத்தை தராமல் மோசடி செய்ததாக பின்னர் கேள்விப்பட்டேன் என்றால் சரியல்ல.இது சம்மந்தமாக சுந்தரம்மாள் புகார் கொடுத்து போலிசார் என்னை விசாரித்தபோது போலிசார் விசாரணையில் நடந்த சம்பவம்பற்றி கூறி விட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur
CC.182/2021
Deposition of witness for PW.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திரு.நமச்சிவாயம் | சாதி | .. | |
| த/பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 22.09.2022

முதல் விசாரணை – நான் தற்போது புத்தூரில் குடியிருக்கிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். புகார்தாரர் சுந்தரம்மாளை தெரியாது. வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்,

போலிஸ் விசாரணையில் எதிரி அய்யாச்சாமி ஆடுகளை விலைக்கு வாங்கி ராஜபாளையம் வார சந்தையில் விற்று தொழில் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் அடிக்கடி எதிரி அய்யாச்சாமி விலைக்கு வாங்கும் ஆடுகளை வண்டியில் ஏற்றி விட சம்பளத்திற்கு வேலைக்குபோவேன் என்றால் சரியல்ல. எதிரி அய்யாச்சாமி கடந்த 2 1/2 ஆண்டுகளுக்கு முன்பு ராஜபாளையம் புதிய பேருந்து நிலையம் எதிரில் வைத்து நெல்லை மாவட்டம் சங்கரன் கோவில் தாலுகாவை சேர்ந்த சுந்தரம்மாளிடம் இருந்த 16 வெள்ளாடுகளை ரூ.82000–த்திற்கு எங்கள் ஊரை சேர்ந்த சக்திவேல் ஆசாரி மகன் கந்தன் ஆசாரி என்பவர் தரகராக இருந்து மறுநாள் சந்தையில் விற்று மொத்தமாக பணத்தை தருவதாக எதிரி அய்யாச்சாமி சுந்தரம்மாளிடம் தெரிவித்து எங்கள் ஊர்நடுத்தெருவை சேர்ந்த சக்தி என்பவர் லோடு ஆட்டோவில் ஏற்றி கொண்டு புத்தூருக்கு

கொண்டு வந்தார் என்றால் சரியல்ல. எதிரி அய்யாச்சாமி சுந்தரம்மாளிடம் கூறியது போல் சுந்தரம்மாளுக்கு ஆடுகளை விற்று தரவேண்டி பணத்தை தராமல் மோசடி செய்ததாக பின்னர் கேள்விப்பட்டேன் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் சுந்தரம்மாள் புகார் கொடுத்து அதன்பேரில் ராஜபாளையம் தெற்கு காவல் நிலைய போலிசார் என்னை விசாரித்தபோது போலிசார் விசாரணையில் நடந்த சம்பவம்பற்றி கூறி விட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.